<u>நெல்லிக்குப்பம் நகராட்சி</u>

<u>நகர் மன்றக் கூட்டம் நிகழ்ச்சி நிரல்</u>

2020–ம் ஆண்டு நவம்பர் மாதம் 13ம் தேதி (13.11.2020) வெள்ளிக்கிழமை பகல் 12 . 30 மணிக்கு நெல்லிக்குப்பம் நகராட்சி ஆணையர் அறையில் நடைபெற உள்ள நகர் மன்றத்தின் சாதாரண கூட்டத்தில் முடிவு செய்யப்படவுள்ள மன்றப்பொருள்கள் விபரம்.

முன்னிலை : – திரு. எஸ்.பிரபாகரன்
தனி அலுவலர்,
நெல்லிக்குப்பம் நகராட்சி

**<u>மன்றபொருள்.1.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சி அலுவலக வளாகத்தில் கீழ்புறம் உள்ள கழிவறை பழுதடைந்த காரணத்தால் அலுவலகத்தில் உள்ள பணியாளர்கள் , அலுவலகத்திற்கு வரும் பொது மக்கள் மிகவும் சிரமப்படுவதாகவும் , அதனை உடனடியாக சீர் செய்து அதில் உள்ள பழுதுகளை நீக்குமாறும் ஆணையர் அவர்கள் கோரியதற்கிணங்க கழிவறையை பழுது பார்த்து பராமரிப்பு செய்வதற்கு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.155000/–க்கு நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது .

அலுவலகக்குறிப்பு . 1. மன்றம் அனுமதிக்கலாம் .
2. தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தபுள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம் .

**(ந.க.எண். 1891 /2020/இ1)**

**தீர்மான எண் : 165 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

**<u>மன்றபொருள்.2.</u>** தமிழக அரசின் சாதனையை முன்னிட்டு தொழில் மலர் 2020 ( ஆயுத பூஜை மலர் ) நெல்லிக்குப்பம் நகராட்சியில் 2017–18 , 2018–19 , 2019– 20 மற்றும் 2020–21 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட , மேற்கொள்ளப்பட இருக்கும் திட்ட பணிகளின் விவரத்தை கடலூர் , மாவட்ட ஆட்சித் தலைவர் ந.க.எண். 77/செமதொ/2020 நாள். 05.08.2020ன் படி விளம்பரம் செய்ததில் மாலை மலர் நாளிதழ்க்கு விளம்பரத் தொகை ரூ . 10332/– நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது .

<u>அலுவலகக்குறிப்பு:–</u> மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண் . 2813/2020/இ1)**

**தீர்மான எண் : 166 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

**<u>மன்றபொருள்.3.</u>** தமிழக அரசின் சாதனையை முன்னிட்டு "தொழில் மலர் 2020" ( ஆயுத பூஜை மலர் ) நெல்லிக்குப்பம் நகராட்சியில் 2017–18 , 2018–19 , 2019– 20 மற்றும் 2020–21 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட , மேற்கொள்ளப்பட இருக்கும் திட்ட பணிகளின் விவரத்தை கடலூர் , மாவட்ட ஆட்சித் தலைவர் ந.க.எண். 91/செமதொ/2019 நாள்.24.08.2020ன் படி விளம்பரம் செய்ததில் தினகரன் (KAL PUBLICATION (P) LTD ) நாளிதழ்க்கு விளம்பரத் தொகை ரூ . 10000/– நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

<u>அலுவலகக்குறிப்பு:–</u> மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண் . 2812/2020/இ1)**

**தீர்மான எண் : 167 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

**<u>மன்றபொருள்.4.</u>** தமிழக அரசின் சாதனையை முன்னிட்டு "தொழில் மலர் 2020" ( ஆயுத பூஜை மலர் ) நெல்லிக்குப்பம் நகராட்சியில் 2017–18 , 2018–19 , 2019– 20 மற்றும் 2020–21 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட , மேற்கொள்ளப்பட இருக்கும் திட்ட பணிகளின் விவரத்தை 25.10.2020 அன்று விளம்பரம் செய்ததில் தினமலர் நாளிதழ்க்கு விளம்பரத் தொகை ரூ . 10080/– நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது .

அலுவலகக்குறிப்பு . மன்றம் அனுமதிக்கலாம் .

(ந.க.எண் . 2814/2020/இ1)

தீர்மான எண் : 168 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .

<u>மன்றபொருள்.5.</u> தமிழக அரசின் சாதனையை முன்னிட்டு தொழில் மலர் 2020 ( ஆயுத பூஜை மலர் ) நெல்லிக்குப்பம் நகராட்சியில் 2017–18 , 2018–19 , 2019– 20 மற்றும் 2020–21 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட , மேற்கொள்ளப்பட இருக்கும் திட்ட பணிகளின் விவரத்தை கடலூர் , மாவட்ட ஆட்சித் தலைவர் ந.க.எண். 90/செமதொ/2020 நாள்.19.08.2020ன் படி விளம்பரம் செய்ததில் தினத்தந்தி நாளிதழ்க்கு விளம்பரத் தொகை ரூ . 12600/– நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது .

<u>அலுவலகக்குறிப்பு:–</u> மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் . 2813/2020/இ1)

தீர்மான எண் : 169 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .

<u>மன்றபொருள்.6.</u> நெல்லிக்குப்பம் நகராட்சி பொது சுகாதாரம் தற்சமயம் நகர் பகுதியில் கொரோனா தொற்று பரவாமல் தடுத்திடும் பொருட்டு, அனைத்து வார்டுகளிலும் கிருமிநாசினி எந்திர தெளிப்பான்கள் மூலம் தெளிக்கப்பட்டு வருகிறது. இதற்காக பொது சுகாதார வாகனங்கள் இரண்டினை இப்பணிக்காக அனுப்பப்பட்டு வருகிறது. இதன் காரணமாக திடக்கழிவு மேலாண்மை திட்ட பணிகளை மேற்கொள்ள வாகன பற்றாக்குறை ஏற்படுகின்ற காரணத்தினால், அரசு சார்புள்ள நிறுவனமான தி நெல்லிக்குப்பம் அக்ரோ என்ஜினியரிங் மற்றும் சர்வீஸ் கூட்டுறவு மையம் லிமிடெட் இ.2739 வாழப்பட்டு நெல்லிக்குப்பம் நிறுவனம் மூலம் ஏப்ரல்/2020 மற்றும் மே/2020 ஆகிய இரண்டு மாதங்களுக்கு இரண்டு வாகனங்களும் ஜீன்/2020 முதல் நவம்பர்/2020 முடிய ஆறு மாதங்களுக்கு ஒரு வாகனமும் வாடகை அடிப்படையில் எடுத்து பணி மேற்கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது.மேலும், மேற்படி நிறுவனம் நாள் ஒன்றுக்கு ஒரு டிப்பர் டிராக்டருக்கு வாடகை ரூ.2050+GST 5% அதாவது ரூ.2050+103=ரூ.2153/– விலைப்புள்ளி வழங்கி உள்ளமையால், இந்த விலை விகிதத்தில் தொகை வழங்கிடவும், இதற்கான உத்தேச செலவினம் ரூ.6.50லட்சத்திற்கும் அனுமதி வேண்டப்படுகிறது. பொது சுகாதாரம் மற்றும் தொற்று நோய் இவற்றினை கருதி முன்னுரிமை வழங்க வேண்டி உள்ளமையால் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம்–1920 பிரிவு–15ன் கீழ் நடவடிக்கை மேற்கொள்வதினை மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தொற்று நோயின் அவசர அவசியத்தினை கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு–15ன் கீழ் நடவடிக்கை மேற்கொண்டதினை மன்றத்தில் பதிவு செய்யலாம்.
3. உத்தேச செலவினம் ரூ.6.50 லட்சத்தினை நகராட்சி பொது நிதி அல்லது திடக்கழிவு மேலாண்மை நிதியிலிருந்து வழங்கிட அனுமதிக்கலாம்.
4. தேவையான வாகனங்களை நெல்லிக்குப்பம் அக்ரோ மூலம் பெறப்பட்டு பணி மேற்கொள்வதினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.1030/2020/எச்1)

தீர்மான எண் : 170 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .

<u>மன்றபொருள்.7.</u> இந்நகராட்சி பகுதியில் கொரோனா தொற்று நோய் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்வதற்கு கிருமிநாசினிகள் லைசால் – 5000லிட்டர் மற்றும் நீர்த்த சுண்ணாம்பு – 5000கிலோகிராம் ஆணையர் அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண்.1030/2020/எச்1 நாள்.04.05.2020ன்படி, ஒப்பந்ததாரர் திருமதி.எஸ்.பரிமளா என்பவரிடம் வாங்கப்பட்டது. கொரோனா தொற்று நோய் பொருட்கள் இருப்பு பதிவேடு பக்க கண்.9 மற்றும் 79ல் பதிவு செய்யப்பட்டு, துப்புரவு கோட்டங்களுக்கு வழங்கப்பட்டது. எனவே அதற்கான தொகை ரூ.9,86,720/–யை தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு–15ன்கீழ் திருமதி.எஸ்.பரிமளா, ஒப்பந்ததாரருக்கு வழங்கபட்டதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: 1.மன்றம் பதிவு செய்யலாம்.
2.தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண்.1030/2020/எச்1)**

**தீர்மான எண் : 171 அலுவலக குறிப்பினை ஏற்று பதிவு செய்யப்பட்டது .**

**<u>மன்றபொருள்.8.</u>** நகராட்சி பகுதியில் கொரோனா தொற்று நோய் பரவாமல் தடுத்திட முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ள அனைத்து வார்டு பகுதிகளிலும் லைசால் மருந்து எந்திர தெளிப்பான்கள் மூலம் தெளிக்க வேண்டி உள்ளதினால், லைசால் தற்சமயம் கையிருப்பு இல்லாத காரணத்தினால், **3000**லிட்டர் லைசால் அவசர அவசியத்தினை கருதியும், கொரோனா தொற்று உடன் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியும் ஆர்.வி.டிரேடார்ஸ், பிள்ளையார் கோயில் தெரு, எலந்தம்பட்டு, பண்ணுருட்டி வட்டம் நிறுவனத்தில் வாங்கிடவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.**5.25** இலட்சத்திற்கும் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் **1920** பிரிவு**–15**ன் கீழ் நடவடிக்கை மேற்கொண்டதினை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக்குறிப்பு: 1. மன்றம் பதிவு செய்யலாம்.
2. நோய் தொற்று கருத்தில் கொண்டு அவசர அவசியத்தினை கருதி **3000**லிட்டர் லைசால் வாங்கியமைக்கும் உத்தேச செலவினம் ரூ.**5.25** இலட்சத்திற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண்.1030/2020/எச்1)**

**தீர்மான எண் : 172 அலுவலக குறிப்பினை ஏற்று பதிவு செய்யப்பட்டது .**

**<u>மன்றபொருள்.9.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சி பகுதியில் தற்சமயம் கொரோனா தொற்று நோய் சில நபர்களுக்கு கண்டறியப்பட்டுள்ளதாக பரிசோதனை அறிக்கை வரப்பெற்று மருத்துவமனையில் தனிமைப்படுத்தி உள்ளதினால், வார்டு பகுதிகள் அனைத்திலும் தொடர்ந்து கண்காணிக்க வேண்டி உள்ளதினால், கிருமி நாசினிகள் அனைத்து பகுதிகளிலும் தெளிக்க வேண்டி உள்ளதினால், பொது சுகாதாரம் மற்றும் தொற்றுநோய் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டிய உள்ளதினால்,

| | | | |
|---|---|---|---|
| 1. | லைசால் | – | 3000லிட்டர் |
| 2. | நீர்த்த சுண்ணாம்பு | – | 10,000கிலோ |
| 3. | பிளீச்சிங் பவுடர் | – | 5,000கிலோ |
| 4. | கபசுர குடிநீர் பவுடர் | – | 200கிலோ |

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் **1920** பிரிவு**–15**ன் கீழ் ஆர்.வி.டிரேடார்ஸ், எலந்தம்பட்டு, பண்ணுருட்டி என்கின்ற நிறுவனத்தில் வாங்கியதற்கும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.**11.50** இலட்சத்திற்கும் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: 1. மன்றம் பதிவு செய்யலாம்.
2. பொது சுகாதார அவசர அவசியத்தினை கிருமிநாசினிகள் வாங்கியதற்கும், உத்தேச செலவினம் ரூ.**11.50** இலட்சத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.1030/2020/எச்1)**

**தீர்மான எண் : 173 அலுவலக குறிப்பினை ஏற்று பதிவு செய்யப்பட்டது .**

**<u>மன்றபொருள்.10.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சி பொது சுகாதாரம் கொரோனா தொற்றுநோய் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்வதற்கு கிருமி நாசினிகளும் முக கவசமும் இருப்பு குறைவாக உள்ளதினால், தொற்று நோய் கருத்தில் கொண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் **1920** பிரிவு**–15** ன்கீழ்

| | | | |
|---|---|---|---|
| 1. | லைசால் | – | 5000 லிட்டர் |
| 2. | பிளீச்சிங் பவுடர் | – | 3000 கிலோ |
| 3. | நீர்த்த சுண்ணாம்பு | – | 10,000 கிலோ மற்றும் |
| 4. | முக கவசம்(One Use) | – | 10,000 எண்ணிக்கைகள் |

ஆர்.வி.டிரேடர்ஸ், எலந்தம்பட்டு, பண்ணுருட்டி வட்டம் என்கின்ற நிறுவனத்தில் வாங்கியதற்கும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.13.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: 1. மன்றம் பதிவு செய்யலாம்.
2. பொது சுகாதார அவசர அவசியத்தினை கருதி கிருமிநாசினிகள் மற்றும் முககவசம் வாங்கியதற்கும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.13.00 இலட்சத்திற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண்.1030/2020/எச்1)**

**தீர்மான எண் : 174 அலுவலக குறிப்பினை ஏற்று பதிவு செய்யப்பட்டது .**

**<u>மன்றபொருள்.11.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சி பொது சுகாதாரம் நகர் பகுதியில் அனைத்து வார்டுகளிலும் கொரோனா தொற்று அதிக அளவில் பொதுமக்களிடையே பரவி வருகின்ற காரணத்தினால் தடுப்பு நடவடிக்கை துரிதப்படுத்தி மேற்கொள்ள வேண்டி உள்ளதினால், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920ன் கீழ்

1. நீர்த்த சுண்ணாம்பு – 10,000கிலோ
2. பிளீச்சிங் பவுடர் – 5,000கிலோ
3. ஹேண்ட் சானிடைசர் – 100 லிட்டர்
4. காட்டன் கையுறை – 500 ஜோடி
5. முக கவசம்(One Use) – 10,000 எண்ணிக்கைகள் மற்றும்
6. கபசுர குடிநீர் பவுடர் – 200கிலோ

ஆர்.வி.டிரேடர்ஸ், எலந்தம்பட்டு, பண்ணுருட்டி என்கின்ற நிறுவனத்தில் வாங்கியதற்கும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.8.25 இலட்சத்திற்கும் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: 1. மன்றம் பதிவு செய்யலாம்.
2. கொரோனா தொற்று நோய் தடுப்பின் அவசர அவசியத்தினை கருதி கிருமி நாசினிகள், முக கவசங்கள் மற்றும் கபசுர குடிநீர் வாங்கியதற்கும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.8.25 இலட்சத்திற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண்.1030/2020/எச்1)**

**தீர்மான எண் : 175 அலுவலக குறிப்பினை ஏற்று பதிவு செய்யப்பட்டது .**

**<u>மன்றபொருள்.12.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சி பொது சுகாதாரம் நகர் பகுதியில் உள்ள அனைத்து வார்டு பகுதிகளிலும் கொரோனா தொற்றுநோய் பரவாமல் தடுத்திடும் பொருட்டு, நோய் கண்டறியப்பட்ட வீடுகளிலும், அதனை சுற்றியுள்ள பகுதிகளிலும் பிளீச்சிங் பவுடர் கலந்த சுண்ணாம்பு நீர் தெளிக்கப்பட்டு வருவதினால், தற்சமயம் இருப்பு குறைவாக உள்ளதினால், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு – 15ன் கீழ்

1. நீர்த்த சுண்ணாம்பு – 15,000கிலோ மற்றும்
2. பிளீச்சிங் பவுடர் – 3,000கிலோ

ஆர்.வி.டிரேடர்ஸ், எலந்தம்பட்டு, பண்ணுருட்டி வட்டம் என்கின்ற நிறுவனத்தில் வாங்கியதற்கும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.3.65 இலட்சத்திற்கும் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: 1. மன்றம் பதிவு செய்யலாம்.
2.கொரோனா தொற்றுநோய் தடுப்பு பணியின் அவசர அவசியத்தினை கருதி கிருமி நாசினிகள் வாங்கியதற்கும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.3.65 இலட்சத்திற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண்.1030/2020/எச்1)**

**தீர்மான எண் : 176 அலுவலக குறிப்பினை ஏற்று பதிவு செய்யப்பட்டது .**

**<u>மன்றபொருள்.13.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சி பொது சுகாதாரம் – கொரோனா தொற்றுநோய் தடுப்பு பணிகளில் ஈடுபடும் அனைத்து தூய்மை பணியாளர்கள், அம்மா உணவக பணியாளர்கள், நகராட்சி அலுவலக பணியாளர்கள், தூய்மை இந்தியா திட்ட பணியாளர்கள் மற்றும் DBC பணியாளர்கள் அனைவருக்கும் தினமும் இரண்டு முககவசங்கள்(One Time Use) வழங்கிட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளதால், தினமும் சுமார் 400 எண்ணிக்கை முககவசங்கள் (One Time Use) தேவைப்படுகிறது. தற்சமயம் பெய்து வரும் பருவமழை காரணமாக மழைநீர் சூழ்ந்துள்ள பகுதிகளில் வசிக்கும் பொதுமக்களை நகராட்சி மூலம் முகாம்களை ஏற்படுத்தி அங்கு அவர்களை தங்க வைக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும் போது அவர்களுக்கும் முககவசம் வழங்க வேண்டிய நிலை உள்ளதினால், பொது சுகாதார அவசர அவசியத்தினை கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு–15ன் கீழ்

முககவசம் (One Time Use) - 10000 எண்ணிக்கைகள்

ஆர்.வி.டிரேடர்ஸ், எலந்தம்பட்டு, பண்ணுருட்டி வட்டம் என்கின்ற நிறுவனத்தில் வாங்கிட அனுமதி அதற்கான உத்தேச செலவினம் ரூ.1.15 இலட்சத்திற்கும் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: 1. மன்றம் பதிவு செய்யலாம்.
2.தொற்றுநோய் மற்றும் அவசர அவசியத்தினை முககவசம் வாங்கியதற்கும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.1.15 இலட்சத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.1030/2020/எச்1)**

**தீர்மான எண் : 177 அலுவலக குறிப்பினை ஏற்று பதிவு செய்யப்பட்டது .**

**<u>மன்றபொருள்.14.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சி பொது சுகாதாரம் – நகர் பகுதிகளில் உள்ள 30 வார்டுகளிலும் கொரோனா தொற்றுறுநாய் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டி உள்ளதினால், வார்டு பகுதியில் அமைய பெற்றுள்ள குடியிருப்புகள், வணிக நிறுவனங்கள், அலுவலக கட்டிடங்கள் மற்றும் பொது கட்டிடங்களில் தெளிக்கப்பட்டு வரும் நிலையில் தற்சமயம் நகராட்சியில் உள்ள விசை தெளிப்பான்கள் மூலம் அனைத்து பகுதிகளிலும் முழு அளவில் கிருமிநாசினி தெளித்திட முடியவில்லை. மேலும் உயரமான கட்டிடங்களிலும், வேகமாக முழுமையான வீச்சில் அடிக்கக்கூடிய விசை தெளிப்பான்கள் மூலம் மருந்து தெளித்திடவும், தொற்றுநோயினை கட்டுபடுத்திடவும் உயர் அலுவலர்கள் கைபேசி வாயிலாக ஆணையருக்கு அறிவுறுத்தப்பட்டு வருவதினால், அதிக விசையுடன் கிருமிநாசினி தெளிக்கக்கூடிய எந்திர தெளிப்பான் டிராக்டரில் பொருத்தப்பட்டு 750லிட்டர் கொள்ளளவு கொண்ட சின்டெக்ஸ் டேங்க்–2 எண்ணிக்கை மூலம் கிருமிநாசினி தெளிப்பதற்கு, டிராக்டர், டிரெய்லர், எரிப்பொருள் மற்றும் டிரைவர் படி சேர்த்து நாள் ஒன்றுக்கு ரூ.7000/– என உள்ளூர் நகராட்சி ஒப்பந்ததாரர் திருமதி.எஸ்.பரிமளா, நெல்லிக்குப்பம் அவர்கள் வழங்கியுள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று தற்சமயம் ஏப்ரல் – 2020 மற்றும் மே–2020 இரண்டு மாதங்களுக்கு பயன்படுத்திடவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.4.25 இலட்சத்திற்கும் தமிழ்நாடு மாவட்ட நகராட்கிகளின் சட்டம் 1920 பிரிவு–15ன் கீழ் நடவடிக்கை மேற்கொண்டதினை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: 1. மன்றம் பதிவு செய்யலாம்.
2.கொரோனா தொற்றுநோய் தடுப்பு நடவடிக்கை மேற்கொண்டமையால், பணி மேற்கொண்டமைக்கு உத்தேச செலவினம் ரூ.4.25 இலட்சத்திற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண்.1030/2020/எச்1)**

**தீர்மான எண் : 178 அலுவலக குறிப்பினை ஏற்று பதிவு செய்யப்பட்டது .**

**<u>மன்றபொருள்.15.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சி பொது சுகாதாரம் கொரோனா தொற்றுநோய் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு நகர் பகுதியில் உள்ள அனைத்து வார்டு பகுதிகளிலும் லைசால் கிருமிநாசினியினை தண்ணீரில் கலந்து அடிக்கப்பட்டு வருகிறது. தினமும் 200லிட்டருக்கு குறைவில்லை லைசால் பயன்படுத்தப்பட்டு வருவதினால், அதிக செலவு ஏற்படுகிறது. இதன் காரணமாக நிதி நிலைமை

இல்லாத காரணத்தினால், பட்டியல் தொகை வழங்கிட நகராட்சிக்கு மிகவும் சிரமமாக உள்ளது. எனவே ஈகோ கிளின் 50 பிளஸ் – ஒரு லிட்டருக்கு 2500லிட்டர் தண்ணீர் கலந்து குடியிருப்பு மற்றும் ஏனைய பகுதிகளில் அடிக்கலாம் என்பதினால், ஈகோ கிளின் 50 பிளஸ் வாங்கிட விலைப்புள்ளி கோரியதில், மூன்று விலைப்புள்ளிகள்

1. S.R.டிரேடர்ஸ் — ரூ. 4110+GST/per Lt
   திரு.நகர் காலனி, ஈரோடு–3.
2. பிரமிடு பிராசசிங் மில்ஸ் — ரூ.3860+GST/per Lt
   நசியனுர் ரோடு, ஈரோடு–11.
3. ஸ்ரீ சக்தி ஏஜென்சி — ரூ.3010+GST/per Lt
   கணபதி நகர், ஈரோடு–11.

ஆகியவை வரப்பெற்றுள்ளன. வரிசை எண்.3ல் கண்டுள்ள ஸ்ரீ சக்தி ஏஜென்சி, கணபதி நகர், ஈரோடு–11 என்கின்ற நிறுவனத்தின் விலைப்புள்ளி குறைவாக இருந்ததினால், அன்னாரிடம் 200 லிட்டர் வாங்கிடவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.7.25 இலட்சத்திற்கும் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு–15ன் கீழ் நடவடிக்கை மேற்கொண்டதினை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: 1. மன்றம் பதிவு செய்யலாம்.
2.கொரோனா தொற்றுநோய் அவசர அவசியத்தினை கருதி விலைப்புள்ளி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கும், செலவினத்திற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண்.1030/2020/எச்1)**

**தீர்மான எண் : 179 அலுவலக குறிப்பினை ஏற்று பதிவு செய்யப்பட்டது .**

**<u>மன்றபொருள்.16.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சி பொது சுகாதாரம் – தற்சமயம் தமிழகம் முழுவதும் கொரோனா தொற்று நோய் பரவி வரும் நிலையில் , நெல்லிக்குப்பம் நகர் பகுதியிலும் கொரோனா தொற்றுநோய் கண்டறியப்பட்டுள்ளது . எனவே , நகர் பகுதியில் உள்ள 30 வார்டுகளில் உள்ள குடியிருப்புகள் , வணிக நிறுவனங்கள் , பொது இடங்கள் மற்றும் பொது கட்டிடங்களில் , விசை தெளிப்பான்கள் ( Power Sprayers) மூலம் கிருமி நாசினி தெளித்திட வேண்டும் எனவும் , நோய் கண்டுள்ளவர்கள் வசிக்கும் பகுதிகளிலும் பொது இடங்களிலும் 3–5 முறை மருந்து தெளிக்க வேண்டியுள்ளதால் விசை தெளிப்பான்கள் – 03 எண்ணிக்கை வாங்கிடுவதற்கும் , நோய் கண்டவர்கள் மற்றும் நோய் இருக்கும் என சந்தேக படக்கூடியவர் வசிக்கும் பகுதிகளில் , சவுக்கு கழிகளினால் , எவரும் அப்பகுதியில் செல்லாத வண்ணம் தடுப்பு வேலிகள் அமைத்திடுவதற்கும் , ஒரே சமயத்தில் பொது மக்கள் கூட்டமாக வெளி வருவதினை தவிர்த்திடும் பொருட்டு , வீட்டு ஒரு நபர் மட்டும் வாரத்தில் இரண்டு நாட்கள் வருவதற்கும் , அவர் அன்னாரின் வாகனத்தினை பயன்படுத்திடவும் நகராட்சி முலம் அனுமதி சீட்டு வாரத்தில் ஆறு நாட்களில் மூன்று வண்ணங்களில் குடும்ப நபருக்கும் , வாகனத்திற்கும் வழங்கும் அனுமதி சீட்டு மூன்று வண்ணங்களில் வழங்கிடுவதற்கும் , வியாபாரிகளுக்கும் அவர்களின் வாகனத்திற்கும் அனுமதி சீட்டு வழங்கிடுவதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது . மேலும் விசை தெளிப்பான்கள் , தடுப்பு வேலிகள் மற்றும் அனுமதி சீட்டுகள் (12,000 குடியிருப்புகள் மற்றும் 2000 வியாபாரிகள் உள்ளூர் மற்றும் வெளியூர் ) அச்சடிப்பு செய்து வழங்கிடுவதற்கும் , இம் மூன்று பணிகள் மேற்க்கொள்ள உத்தேச செலவீனம் ரூ.6.00 லட்சத்திற்கும் , இப்பணியினை நகராட்சி ஒப்பந்ததாரர் திருமதி. எஸ். பரிமளா மேற்க்கொள்வதற்கும் தமிழ்நாடு மாவட்ட நகராட்சி சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் மேற்க் கொண்டதினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது .

அலுவலகக் குறிப்பு: 1. மன்றம் பதிவு செய்யலாம்.
2. கொரோனா தொற்றுநோய் முன்னிட்டு பணி மேற்கொண்டமைக்கும், செலவினம் ரூ. 6.00 லட்சத்திற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண்.1030/2020/எச்1)**

**தீர்மான எண் : 180 அலுவலக குறிப்பினை ஏற்று பதிவு செய்யப்பட்டது .**

தனி அலுவலர்,
நெல்லிக்குப்பம் நகராட்சி

## <u>பொருள்</u>

நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வார்டு எண் . 28 மேல்பாதியில் உள்ள பழைய உரக்கிடங்கில் (குப்பை கொட்டும் இடத்தில்) ரூ.235.00 லட்சம் மதிப்பீட்டில் (FSTP) 20KLD யில் கசடு சுத்திகரிப்பு நிலையம் கட்டப்பட உள்ளது . மேற்படி கசடு சுத்திகரிப்பு நிலையத்தை செயல்படுத்த கசடு கழிவு மேலாண்மை உப விதிகள் தயார் செய்யப்பட்டு நகராட்சி நிர்வாக ஆணையர் , சென்னை அவர்களிடம் அனுமதி பெற வேண்டியுள்ளதால் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது .

அலுவலகக்குறிப்பு . மன்றம் அனுமதிக்கலாம் .

**(ந.க.எண். 0103 /2019/இ1)**

நகராட்சி பொறியாளர் ஆணையாளர்(கூ.பொ) மற்றும் தனி அலுவலர்

**<u>மன்றபொருள்.4.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சி அலுவலக வளாகத்தில் கீழ்புறம் உள்ள கழிவறை பழுதடைந்த காரணத்தால் அலுவலகத்தில் உள்ள பணியாளர்கள் , அலுவலகத்திற்கு வரும் பொது மக்கள் மிகவும் சிரமப்படுவதாகவும் , அதனை உடனடியாக சீர் செய்து அதில் உள்ள பழுதுகளை நீக்குமாறும் ஆணையர் அவர்கள் கோரியதற்கிணங்க கழிவறையை பழுது பார்த்து பராமரிப்பு செய்வதற்கு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.155000/—க்கு நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது .

அலுவலகக்குறிப்பு . 1. மன்றம் அனுமதிக்கலாம் .

2. தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தபுள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம் .

**(ந.க.எண். 1891 /2020/இ1)**

**<u>மன்றபொருள்</u>**

நெல்லிக்குப்பம் நகராட்சி அலுவலகத்தில் அனைத்து அலுவலகப் பணிகளும் மையப்படுத்தப்பட்ட இணையதளம் (CMA – UTIS – WEBSITE ) , மின்னஞ்சல் , நகராட்சி இணையதளம் , CPS இணையதளம் மற்றும் மத்திய மாநில அரசுகளின் இணையதள வழியாக பணி பர்க்கப்பட்டு வருகின்றது .

தற்பொழுது பயன்பாட்டில் உள்ள BSNL Broad Band internet Connection வழியே மேற்சொன்ன பணிகள் நடைபெறும் போது இணைய வேகம் குறைதல் மற்றும் இணைப்பில் அவ்வப்போது துண்டிப்பு ஏற்படுகின்றது . இதன் தொடர்ச்சியாக அலுவலக பணியில் சுணக்கம் ஏற்பட்டு வருகின்றது .

இணையதளம் வேகம் அதிகரிக்கும் பொருட்டு தற்போது பயன்பாட்டிலுள்ள BSNL Broad Band internet இணைப்புக்கு பதிலாக மாற்றாக BSNL Bharat Fibre Cable –FTTH internet இணைப்பு பெற்று பயன்பாட்டிற்கு கொண்டு வர தோராய செலவினம் ரூ. 8500/– நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது .

அலுவலகக்குறிப்பு . 1. மன்றம் அனுமதிக்கலாம் .

2. தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டு தொகை வழங்கிறதை மன்றம் அனுமதிக்கலாம் .

**(ந.க.எண். 2939 /2020/இ1)**

நகராட்சி பொறியாளர்

ஆணையாளர்(கூ.பொ) மற்றும் தனி அலுவலர்

<u>மன்றபொருள்</u>

நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள வார்டு எண் . 22 ஆலை ரோடு அருகில் ஜம்புலிங்கம் பூங்கா மேல்நிலை தண்ணீத் தொட்டி வளாகம் அருகில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான வாரசந்தை நடக்கும் சந்தை திடலில் உள்ள சிறிய உயர் மின் கோபுர விளக்கு (250x6) MHL மின் விளக்கு கம்பம் வடகிழக்கு பருவ மழை மற்றும் நிவர் புயல் காரணமாக முறிந்து கீழே விழுந்துவிட்டது . அதில் உள்ள மின் விளக்குகள் அனைத்தும் மீண்டும் உபயோகபடுத்த இயலாதவாறு பழுதடைந்துவிட்டது . இதன் காரணமாக அப்பகுதியில் இரவு நேரங்களில் இருண்டு உள்ளது . இதனால் பொது மக்கள் பெரிதும்

பாதிப்பு அடைந்துள்ளார்கள் . இதே போல் ஜம்புலிங்கம் பூங்கா மேல் நிலை தண்ணீர் தொட்டி வளாகத்தில் உள்ள 2 மின் விளக்குகள் புயல் காரணமாக மிக மோசமாக பழுதடைந்துள்ளது . இதனால் இரவு நேரங்களில் வால்வுகள் திறக்கவும் , மோட்டார் பம்புகள் இயக்கவும் முடியாமல் உள்ளது . இதனால் குடிநீர் விநியோகம் தடைபடும் நிலை ஏற்பட்டுள்ளது . எனவே மேற்படி இரண்டு இடங்களில் பழுதடைந்த 6 மின் விளக்குகளை (4+2) புதியதாக மாற்ற வேண்டியுள்ளது . மேலும் அருகில் உள்ள மற்றொரு மின் கம்பத்தின் கீழ் பாகம் பழுதடைந்துள்ளது . எனவே மேற்கண்ட இரண்டு சிறிய உயர் மின் கோபுரங்களின் கீழ் பகுதியில் கான்கீரிட் தளம் அமைத்து புதிய மின் விளக்குகள் பொறுத்தவும், மேல் நிலை தண்ணீர் தொட்டி வளாகத்தில் புதிய மின் விளக்குகள் பொறுத்தவும் இப்பணியின் அவசர அவசியம் கருதியும் , பொது மக்கள் நலன் கருதியும் , குடிநீர் விநியோகம் தடைபடாமல் இருக்கவும் தயாரிக்கப்பட்டள்ள மதிப்பீடு ரூ.100000/—க்கு நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது .

அலுவலகக்குறிப்பு . 1. மன்றம் அனுமதிக்கலாம் .

2. தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தபுள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம் .

**(ந.க.எண். 2958 /2020/இ1)**

நகராட்சி பொறியாளர் ஆணையாளர்(கூ.பொ) மற்றும் தனி அலுவலர்

<u>மன்றபொருள்</u>

நெல்லிக்குப்பம் நகராட்சி அலுவலகத்தில் அனைத்து அலுவலகப் பணிகளும் மையப்படுத்தப்பட்ட இணையதளம் (CMA – UTIS – WEBSITE ) , மின்னஞ்சல் , நகராட்சி இணையதளம் , CPS இணையதளம் மற்றும் மத்திய மாநில அரசுகளின் இணையதள வழியாக பணி பர்க்கப்பட்டு வருகின்றது .

தற்பொழுது பயன்பாட்டில் உள்ள BSNL Broad Band internet Connection வழியே மேற்சொன்ன பணிகள் நடைபெறும் போது இணைய வேகம் குறைதல் மற்றும் இணைப்பில் அவ்வப்போது துண்டிப்பு ஏற்படுகின்றது . இதன் தொடர்ச்சியாக அலுவலக பணியில் சுணக்கம் ஏற்பட்டு வருகின்றது .

இணையதளம் வேகம் அதிகரிக்கும் பொருட்டு தற்போது பயன்பாட்டிலுள்ள BSNL Broad Band internet இணைப்புக்கு பதிலாக மாற்றாக BSNL Bharat Fibre Cable –FTTH internet இணைப்பு பெற்று பயன்பாட்டிற்கு கொண்டு வர தோராய செலவினம் ரூ. 8500/– நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் , பட்டியல் தொகை அங்கீகாரம் பெற்ற டீலர் திரு .R.செந்தில் , R.T.S Communications , நெல்லிக்குப்பம் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது .

அலுவலகக்குறிப்பு . 1. மன்றம் அனுமதிக்கலாம் .

2. தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டு தொகை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம் .

**(ந.க.எண். 2939 /2020/இ1)**

நகராட்சி பொறியாளர் ஆணையாளர்(கூ.பொ) மற்றும் தனி அலுவலர்

**<u>மன்றபொருள்</u>**

நெல்லிக்குப்பம் நகராட்சி பொது சுகாதாரம் – தற்சமயம் தமிழகம் முழுவதும் கொரோனா தொற்று நோய் பரவி வரும் நிலையில் , நெல்லிக்குப்பம் நகர் பகுதியிலும் கொரோனா தொற்றுநோய் கண்டறியப்பட்டுள்ளது . எனவே , நகர் பகுதியில் உள்ள 30 வார்டுகளில் உள்ள குடியிருப்புகள் , வணிக நிறுவனங்கள் , பொது இடங்கள் மற்றும் பொது கட்டிடங்களில் , விசை தெளிப்பான்கள் ( Power Sprayers) மூலம் கிருமி நாசினி தெளித்திட வேண்டும் எனவும் , நோய் கண்டுள்ளவர்கள் வசிக்கும் பகுதிகளிலும் பொது இடங்களிலும் 3–5 முறை மருந்து தெளிக்க வேண்டியுள்ளதால் விசை தெளிப்பான்கள் – 03 எண்ணிக்கை வாங்கிடுவதற்கும் , நோய் கண்டவர்கள் மற்றும் நோய் இருக்கும் என சந்தேக படக்கூடியவர் வசிக்கும் பகுதிகளில் , சவுக்கு கழிகளினால் , எவரும் அப்பகுதியில் செல்லாத வண்ணம் தடுப்பு வேலிகள் அமைத்திடுவதற்கும் , ஒரே சமயத்தில் பொது மக்கள் கூட்டமாக வெளி

வருவதினை தவிர்த்திடும் பொருட்டு , வீட்டு ஒரு நபர் மட்டும் வாரத்தில் இரண்டு நாட்கள் வருவதற்கும் , அவர் அன்னாரின் வாகனத்தினை பயன்படுத்திடவும் நகராட்சி முலம் அனுமதி சீட்டு வாரத்தில் ஆறு நாட்களில் மூன்று வண்ணங்களில் குடும்ப நபருக்கும் , வாகனத்திற்கும் வழங்கும் அனுமதி சீட்டு மூன்று வண்ணங்களில் வழங்கிடுவதற்கும் , வியாபாரிகளுக்கும் அவர்களின் வாகனத்திற்கும் அனுமதி சீட்டு வழங்கிடுவதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது . மேலும் விசை தெளிப்பான்கள் , தடுப்பு வேலிகள் மற்றும் அனுமதி சீட்டுகள் (12,000 குடியிருப்புகள் மற்றும் 2000 வியாபாரிகள் உள்ளூர் மற்றும் வெளியூர் ) அச்சடிப்பு செய்து வழங்கிடுவதற்கும் , இம் மூன்று பணிகள் மேற்க்கொள்ள உத்தேச செலவீனம் ரூ.6.00 லட்சத்திற்கும் , இப்பணியினை நகராட்சி ஒப்பந்ததாரர் திருமதி. எஸ். பரிமளா மேற்க்கொள்வதற்கும் தமிழ்நாடு மாவட்ட நகராட்சி சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் மேற்க் கொண்டதினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது .

அலுவலகக் குறிப்பு:

1. மன்றம் பதிவு செய்யலாம்.
2. கொரோனா தொற்றுநோய் முன்னிட்டு பணி மேற்கொண்டமைக்கும், செலவினம் ரூ.6.00 லட்சத்திற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண்.1030/2020/எச்1)**